# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 29.06.2021 supeedsam.com supeedsam@gmail.com







# அரசியற் கைதிகளுக்குசிறை, கொலைக் குற்றவாளிகளுக்கு பொதுமன்னிப்பு; இது தான் ஒரே நாடு ஒரே சட்டம்

## சாணக்கியன் சீற்றம்



தன்னுடைய இனத்தின் விடுதலைக்காகப் போராடியவர்கள் இன்னும் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்து குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டவர் ஐந்து வருட சிறைத்தண்டனை அனுபவித்தது போதுமானது என்றால் இதில் என்ன நியாயம் இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...


## எமது கடல்வளத்தை வெளிநாட்டவர்கள் சுரண்டும் நிலை உருவாகியுள்ளது:சுமந்திரன்



சீன நிறுவனம் கடலட்டை வளர்ப்பில் ஈடுபடுவது வெளிச்சமாகியுள்ளது என தெரிவித்துள்ள தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எமது கடல்வளத்தை வெளிநாட்டவர்கள் சுரண்டும் நிலை உருவாகியுள்ளது என தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 169 பேருக்கு கொரோனா தொற்று உறுதி!



(படுவான்பாலகன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 169 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

07 ஆம் பக்கத்தில்...

## கல்முனை நகரில் தீ பந்த போராட்டம்

அரசுக்கு எதிரான கோஷங்களுடன் மக்கள் விடுதலை முன்னணி அம்பாறை மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் அடங்கிய பிரமுகர்கள் கண்டன தீப்பந்த போராட்டத்தை கல்முனை நகரில் நேற்று மாலை முன்னெடுத்தனர்.

02 ஆம் பக்கத்தில்...



(நூருள் ஹுதா உமர்)

## புலிகளின் ஆடையை ஒத்த சீருடையை அணிந்தால் கைது சீன இராணுவ சீருடை அணிந்தவர்களுக்கு எதிராக மௌனம் ஏன்?

### அக்மீமன தயாரத்ன தேரர் கேள்வி



தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆடையை ஒத்த சீருடையை அணிந்தவர்களை கைது செய்த இலங்கைச் சட்டம், இன்று சீன இராணுவத்தின் சீருடையை அணிந்தவர்களுக்கு எதிராக மௌனமாக இருப்பது ஏன் என அக்மீமன தயாரத்ன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சீன இராணுவத்தைக் கொண்டு உள்நாட்டு வாவி ஒன்றை

07 ஆம் பக்கத்தில்...

## வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு புதிய ஒழுங்கு விதிகள் அறிமுகம்

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு ஜூலை மாதம் முதல் புதிய ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் 74,138 பேருக்கு கோரோனா ஊசி ஏற்றல்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்திற்கென வழங்கப்பட்ட 75 ஆயிரம் சைனோபாம் தடுப்பூசிகளில் 74138 ஊசிகள் நேற்று வரை ஏற்றப்பட்டுள்ளதென கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள

02 ஆம் பக்கத்தில்...






## கிழக்கு ஆளுனரால் இணைய வசதியற்ற மாணவர்களுக்கு வினாத்தாள்கள் வழங்கி வைப்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கோவிட்19 தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்த பாடசாலைகள் விடுமுறைகள் காரணமாக வீட்டில் இணைய வசதி

07 ஆம் பக்கத்தில்...

## பிச்சைக்காரனின் காயத்திற்கு உடனடி சிகிச்சையளிப்பதே கூட்டமைப்பின் இலக்கு நோக்கிய பயணமாகும்

(துறையூர் சஞ்சயன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே இருக்கின்ற அரசியல்வாதிகள் தமிழ்மக்களின் அடிப்படை உரிமை சார் விடயத்தில் உறுதியாக இருந்து செயற்படுபவர்களே தவிர தமிழ்மக்களின் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு சுய இலாப அரசியல்

02 ஆம் பக்கத்தில்...



## அரசியல் கைதிகள் விடயத்தில் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்யமுடியாது: நாமல் ராஜபக்ச

(வடமராட்சி நிருபர்)

அரசியல் கைதிகள் விடயத்தில் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்யமுடியாது.அதற்கென்று ஒரு முறை உள்ளது. அதன் பிரகாரம் ஜனாதிபதியுடன்

02 ஆம் பக்கத்தில்...













சுவிட்சர்லாந்து தூதுவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய போது...











## 8 நாடுகளில் இருந்து இலங்கை வர தடை

கொவிட் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் தென் ஆப்ரிக்க நாடுகள் உள்ளிட்ட 8 நாடுகளில் இருந்து இலங்கை வரும் பயணிகளுக்கு தற்காலிகமாக தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

07 ஆம் பக்கத்தில்...

## அரசியல் கைதிகள் விடயத்தில் எடுத்தோம்

கலந்துரையாடப்பட்டு முன்னெடுக்கப்படும் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

வடமராட்சி முள்ளிப்பகுதியில் அமைக்கப்பட்ட சேதனப் பசளை உற்பத்தி நிலையத்தை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

ஜனாதிபதியின் கொள்கையின் பிரகாரம் இரசாயன உரத்தில் இருந்து சேதனைப் பசளைக்கு செல்லும் காலமிது. அதேபோல் அதனுடன் தொடர்புபட்ட கொம்பசை உருவாக்கி பசளையின்யின் தரத்தை உயர்த்தி அதன் மூலம் விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணும் இந்த காலகட்டத்தில், இந்த இயந்திரத்தை அமைச்சர் றொசான் ரணசிங்கவின் அமைச்சினூடாக யாழ்.மாவட்டத்திற்கு வழங்கியுள்ளோம். இங்கே சேகரிக்கப்படும் சுமார் 50 தொன் குப்பைகளை பசளையாக்கமுடியும்.

குப்பைப் பிரச்சனைக்கு தீர்வு காணும் அதே வேளை சேதனப் பசளையை உற்பத்தி செய்து விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்கமுடியும். அரசியல் கைதிகள் தொடர்பில் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்யமுடியாது. அதற்கென்று ஒரு முறை உள்ளது. அதன் பிரகாரம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டு அது முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.

## கிழக்கில் 74,138 பேருக்கு கொரோனா

பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

7மட்டு.மாவட்டத்தில் 24995பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 24146 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 24997பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

கல்முனைப்பிராந்தியத்திற்கு இன்னும் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்படவில்லை.அதற்கான முன்னாயத்தவேலைகள் சகல சுகாதாரப்பிரிவுகளிலும் எடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் நேற்று வரை கொரோனாவுக்கு 260பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 234 பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்களாவர். திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 126பேர் மரணித்துள்ளனர்.

இறுதியாக நேற்று ஆலையடி வேம்பு காத்தான்பகுடி திருமலை ஆகிய பிரதேசங்களில் மூவர் மரணித்துள்ளனர்.

கிழக்கில் இதுவரை மரணித்த 260பேரில் திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய 126பேரும் அம்பாறைப்பிராந்தியத்தில் 26 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் %2 பேரும் கல்முனைப்பிராந்தியத்தில் 36 பேரும் மரணித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தொற்றுக்களின் எண்ணிக்கை 14ஆயிரத்தை கடந்துள்ளது.இதுவரை 14504பேருக்கு கொறொனாத்தொற்று ஏற்பட்டுள்ளது.

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

## பிச்சைக்காரனின் காயத்திற்கு உடனடி சிகிச்சையளிப்பதே

செய்பவர்களல்ல, என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

கூட்டமைப்பினருக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க விருப்பமில்லையா ? என வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தமிழர்களின் நியாய விடயங்களை தீர்த்து வைப்பதிலே தடையாக இருந்து செயற்படுபவர்கள் என்பதை எல்லோரும் அறிவர். ஆகவே நாட்டின் ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்பாக இருக்கின்ற கூட்டமைப்பினரை மக்கள் மத்தியிலே இருந்து பிரித்தெடுத்து கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு தேவையற்றவர்கள் என்ற ஒரு வித்தியாச பார்வையைத் தோற்றுவிக்கவே அரசாங்கம் முயற்சிக்கிறது.

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரல் கூறுவது போல, கூட்டமைப்பினர் பிச்சைக்காரனின் காயத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு சுய இலாப அரசியல் செய்பவர்களல்ல என்பதை ஆளுங்கட்சியிலுள்ளவர்கள் உணர வேண்டும். பிச்சைக்காரனின் காயத்திற்கு உடனடி சிகிச்சையளிப்பதே கூட்டமைப்பின் இலக்கு நோக்கிய பயணமாகும்.

அரசியல் கைதிகளின் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்க முயற்சிக்கும்போது கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்கால அரசியல் பறிபோகலாம் என்று குழப்பமடையவோ பீதியடையவோ இல்லை. பிச்சைக்காரனின் காயத்தை வைத்து அரசியல் செய்ய வேண்டிய தேவை கூட்டமைப்பினருக்கு இல்லை என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் தீர்த்தால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதோ கூட்டமைப்பு மக்கள் பிரதிநிதிகளினதோ அரசியல் எதிர்காலம் இல்லாமல் போய்விடும் என்ற தவறான புரிதல் பார்வை மாற்றப்பட வேண்டும்.

பிச்சைக்காரனின் காயத்தைப் போன்று நாங்கள் எந்தப் பிரச்சினைகளையும் வெறுமனே துறை சார் அமைச்சர்களுடனோ பிரதமருடனோ கதைக்காமல் இருக்கவில்லை. தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அனைத்துப் அடிப்படைப் பிரச்சினைகளையும் ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் கூறி வருகிறோம். ஆனால் இற்றைவரை எந்தத் தீர்வும் கைகூடவில்லை.

ஆகவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு தமிழ்மக்களின் பிரச்சினைகளை தீர்க்க விருப்பமில்லை என்ற தவறான கருத்தைக் கண்டிக்கிறேன். பன்மைத்துவ நாட்டில் ஒரு சில அசாதாரண செயற்பாடுகளும் கருத்துக்களுமே இனங்களுக்கிடையிலான பிளவு முரண்பாடுகளை ஏற்படுத்துகிறது என்றார்.

## கல்முனை நகரில் தீ பந்த போராட்டம்

அம்பாறையின் பல்வேறு பிரதேசங்களை சேர்ந்த பலரும் ஒன்றிணைந்து அரசை கண்டித்த கோஷங்களையும் அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என்ற கோஷத்துடனும் குரலெழுப்பினர். அரசி விலை உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு, எரிபொருள் விலைகளை பற்றியும் பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

## வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு புதிய ஒழுங்கு விதிகள்

வரும் இலங்கையர்கள், வணிக பயணிகள், இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள், சுற்றுலா பயணிகள் மற்றும் வதிவிட விசா பெற்றவர்களுக்கு புதிய பயண ஒழுங்கு விதிகள் அமுலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய ஒழுங்கு விதிகள் 1 மாத காலத்துக்கு பின்பற்றப்படவுள்ளன.

முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமல் நாட்டுக்கு வரும் இலங்கையர்கள் மற்றும் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்களுக்கு முதலாம் நாள் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்படுவர்.

அதன் பின்னர், 11 முதல் 14 நாட்களுக்குள் மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனைகளில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை எனின் 14 நாட்கள் நிறைவடையும் போது, வீடுகளுக்கு செல்லலாம்.

அவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டால், அருகில் உள்ள சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டு நாடு திரும்பும் இலங்கையர்கள் மற்றும் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்களுக்கு முதலாம் நாள் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர், வீடுகளில் கட்டாய தடுமைப்படுத்தலை நிறைவு செய்யும் நிபந்தனையுடன் வீடு திரும்பலாம்.

மேற்படி 14 நாள் முடிவில் மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்படவில்லை எனின், அவர்களை வீட்டு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்க பொது சுகாதார அதிகாரிகளுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனுமதி பெற்று இராஜதந்திர மட்டத்தில் நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் பிசிஆர் பரிசோதனைகளின் பின்னர் தனிமைப்படுத்தல் ஹோட்டல்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

அவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்படாதவிடத்து, 11 முதல் 14 நாட்களுக்குள் இரண்டாவது பிசிஆர் பரிசோதனையை மேற்கொண்டு, அதிலும் தொற்று உறுதிப்படுத்தப்படாத போது, 14 ஆம் நாள் நிறைவில் தனிமைப்படுத்தல் நடவடிக்கையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

இலங்கைக்கு வருகை தரும் அனைத்து வெளிநாட்டவர்களையும், அவர்கள் ஏற்றிக் கொண்ட தடுப்பூசி தொடர்பில் ஆராய்ந்து, முதலாவது பிசிஆர் பரிசோதனையின் பின்னர் தனிமைப்படுத்தல் ஹோட்டல்களுக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

## எமது கடல்வளத்தை வெளிநாட்டவர்கள் சுரண்டும் நிலை

பூநகரி கௌதாரிமுனை பகுதியில் சீன நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அட்டை வளர்ப்பு தொடர்பில் மக்களின் நிலைப்பாடுகளை கேட்டறிந்த பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பூநகரி கௌதாரிமுனை கடல் பரப்பில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபடும் சீன நிறுவனம் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான எம் ஏ சுமந்திரன், மற்றும் எஸ்.சிறிதரன் ஆகியோர் குறித்த பகுதிக்கு சென்றிருந்தனர்.

இதன்போது கடலட்டையில் ஈடுபட்டுவரும் நிறுவனம் தொடர்பில் மக்களிடம் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து முடிவு எடுப்பதாக மக்களிற்கு தெரிவித்தனர்.

தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த எம் சுமந்திரன்,சீன நிறுவனம் கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. குறித்த விடயத்தை பார்ப்பதற்காக நாங்கள் சென்றிருந்தோம். குறித்த அமைவிடம் மக்களிற்கு தெரியாத மறைவிடமாக அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தினர் அரியாலையில் தமது அலுவலகத்தை வைத்துள்ளனர் என்ற விபரத்தினையும் நாங்கள் சேகரித்துள்ளோம். சட்டவிரோதமான அனுமதி கடல் தொழில் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இந்த தொழிலில் ஈடுபடுவதற்கு ஒருவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு அப்பால், இந்த நாட்டிலே சீன ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சியாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

நேற்றைய தினம் குடத்தனையில் உள்ள எனது வீட்டுக்கு சென்று திரும்புகின்றபோது வீதி அபிவிருத்தி பணிகளில் சீனர்கள் நின்றார்கள். நான் படம் எடுத்து வைத்துள்ளேன். வீதி வேலை செய்வதற்கு தொழிலாளிகள்கூட எங்கள் ஊரில் எடுக்காமல் சீனாவிலிருந்து இறக்குமதி செய்து உபயோகிக்கின்றார்கள்.

குறித்த விடயங்களை நாங்கள் முழுமையாக வெளிப்படுத்தவுள்ளோம்.இது ஏற்றுக் கொள்ள முடியாத நடவடிக்கைகள். எங்கள் மக்களுடைய கடல் வளத்தை சுரண்டுவதும், கடல் அட்டைகள் பிடிப்பது தொடர்பிலும் பல தடவைகள் பல பிரச்சினைகள் எழுந்துள்ளது.

வெளி இடங்களிலிருந்து எந்து தொழிலை செய்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைத்தார்கள். இப்பொழுது வெளி இடங்கள் என்று சொல்வதற்கு அப்பால் வெளிநாடுகளிலிருந்து தூர பிரதேசங்களிலிருந்து இதற்கென்று ஆட்கள் வருவிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த பின்னணிகளை வெகு விரைவிலே நாங்கள் வெளிப்படுத்துவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன் ஊடகங்களிற்கு தெரிவித்திருந்தார்.




Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

## அரசியற் கைதிகளுக்குசிறை, கொலைக் குற்றவாளிகளுக்கு

அரசியற் கைதிகளின் விடுதலை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் விடயம் தான் அண்மையில் இடம்பெற்ற அரசியற் கைதிகளின் விடுதலை. இது தொடர்பில் அரசுடன் இணைந்திருக்கும் பிரதிநிதிகள் உரிமை கோரும் விதமாக சில முகநூல் பதிவுகள், அறிக்கைகளை விடுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் பாராளுமன்றம் தொடங்கி ஒருவருடமாகியும் அரசியற் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவர்கள் அரசாங்கத்திற்கு எவ்வித அழுத்தமும் கொடுத்ததாக நாங்கள் அறியவில்லை. நாங்கள் அரசியற் கைதிகளின் விடுதலை தொடர்பில் கேள்வி எழுப்பும் போதுகூட எங்கள் கருத்துகளைக் குழப்பும் செயற்பாடுகளையே அவர்கள் செய்திருந்தார்கள்.

தற்போது இடம்பெற்ற அரசியற் கைதிகள் சிலரின் விடுதலை வரவேற்ககத்தக்க ஒரு நல்ல விடயம். பதினாறு அரசியற் கைதிகளை விடுவித்தமை வரவேற்கத்தக்க விடயமாக இருந்தாலும் ஏனையவர்ககளையும் விடுவிக்கும் வரையில் எங்கள் அழுத்தங்களைக் குறைக்க மாட்டோம். நாங்கள் தொடர்ச்சியாக எங்கள் அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டே இருப்போம்.

மேற்படி விடுவிக்கப்படவர்களின் வழக்குகள் 2015 தொடக்கம் 2020ம் ஆண்டு காலப்பகுதியில் தான் முடிவுக்கு வந்திருக்கின்றது. கடந்த நல்லாட்சி காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகத் தான் அரசியற் கைதிகளின் விடுதலை தற்போது சாத்தியமாக்கப்பட்டிருக்கின்றது. அந்த வழக்குகள் முடிந்த காரணத்தினால் தான் அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆனால், இன்னும் பலர் சிறையிலே வாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் வேதனையான விடயமே.

அரசியற் கைதிகள விடுதலை செய்யப்படப் போகிறார்கள் என்று சொன்னவுடன் எத்தனையோ தாய்மார், மனைவி, குழந்தைகள், சகோதரங்கள் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக பதினாறு பேர் மாத்திரம் தான் வெளியில் வந்திருக்கின்றார்கள். அது எமது உறவுகள் பலருக்கு ஏமாற்றமாக இருந்தாலும், சிறையில் இருக்கும் ஏனையவர்களையும் விடுதலை செய்வதற்காக நாங்கள் சில சில போராட்டங்களையும், அழுத்தங்களையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

அத்துடன் குறிப்பாக வடக்கு கிழக்கிலே அரசியற் கைதிகளின் விடுதலையுடன் சேர்த்து முகநூல்களில் பதிவுகளை மேற்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கும் இளைஞர்களின் விடுதலைக்காவும் அரசியற் கைதிகளின் விடுதலைக்குச் சமாந்தரமாகக் குரல் கொடுக்க வேண்டும். ஏனெனில் பல தாய்மார்கள் என்னை வந்து சந்திக்கின்ற போதும் கூட விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மகன்மார் இன்னும் விடுவிக்கப்படவில்லை என அவர்களின் மனக்குமுறல்களை வெளிப்படுத்துகின்றார்கள்.

இந்த விடயங்களையும் நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். பல இளைஞர்களைக் கைது செய்து தற்போது ஒரு வருடமாகவும் போகின்றது. இவ்வாறே விட்டுக் கொண்டிருந்தால் இருபது வருடங்கள் வரைக்கும் இமீதுபோன்றே சிறையில் வைத்திருப்பார்கள். முகநூலில் பதிவிட்ட குற்றச்சாட்டுக்காக சிறையில் ஒரு வருடம் இருப்பதென்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயம். அந்த வகையில் இவர்களின் விடுதலைக்காவும் தொடர்ச்சியாக நாங்கள் அழுத்தம் கொடுப்போம்.

துமிந்த சில்வா அவர்களின் விடுதலையை நியாயப்படுத்தும் முகமாக அவர்களின் கீழ் இயங்கும் சில ஊடகங்கள் செயற்படுகின்றன. அவ்வாறான ஊடகம் தற்போதையை ஜனாதிபதியை ஜனாதிபதியாக்குவதற்கும் தற்போதைய அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கும் கடுமையாகப் பாடுபட்ட ஒரு ஊடகம். ஆனால் கடந்த சில மாதங்களாக அரசினை தாக்கி அரசிற்கு எதிரான செய்திகளை வெளியிட்டதை அவதானிக்க முடிந்தது. நாட்டிலே மக்களின் பிரச்சினைகள் எத்தனையோ இருக்க ஒரு நடிகையைக் கைது செய்தது தான் பெரிய பிரச்சினை போன்று வெளிப்படுத்தி அரசிற்கு பாரிய அழுத்தங்களைக் கொடுக்கும் முகமாகச் செயற்பட்டது. அந்த நேரத்திலே எனக்கு சந்தேகம் ஏற்பட்டது துமிந்த சில்வா அவர்களை விடுதலை செய்வதற்காக ஒரு நாடகமமாக இது இருக்கலாம் என்று. அது போலவே நடந்து விட்டது.

தற்போது அவரை விடுதலை செய்ததற்கு அவர் போதியளவு சிறைத் தண்டனை அனுபவித்து விட்டதாக அமைச்சர் நாமல் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்ததாகச் சொல்லி உயர்நீதிமன்ற நீதியரசர்களினால் தண்டனை வழங்கிய ஒருவர் ஐந்து வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தது போதுமானதாக இருந்தால். போராட்ட காலத்தில் ஏதோவொரு அடிப்படையில் கைது செய்து பல வருடங்களாகச் சிறையில் வாடும் அரசியற் கைதிகள் அனைவரையும் ஏன் இது வரை விடுதலை செய்யவில்லை என்ற கேள்வி அனைவர் மனதிலும் இருக்கின்றது.

ஏனெனில் இன்று அரசியற் கைதிகள் என்று நாங்கள் கூறும் எவருமே தங்களின் சொந்தத் தேவைக்காகவோ, தனிப்பட்ட நலனுக்காகவோ தாக்கியவர்களோ அல்லது கொலை, கொள்ளை, கற்பழிப்புச் செய்தவர்களோ அல்ல. அவர்கள் ஏதோவொரு விதத்தில் தங்களின் இனத்தின் விடிவுக்காகப் போராடிய குற்றச்சாட்டில் சில சில தவறுகளுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். தன்னுடைய இனத்தின் விடுதலைக்காகப் போராடியவர்கள் இன்னும் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொலைசெய்து குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டவர் ஐந்து வருட சிறைத்தண்டனை அனுபவதித்தது போதுமானது என்றால் இதில் என்ன நியாயம் இருக்கின்றது.

ஜனாதிபதி அவர்கள் தனது முதலாவது உரையிலே தெரிவித்திருந்தார் ஒரு நாடு ஒரு சட்டம் என்று. ஆனால் இங்கு ஒரு நாடு எத்தனையோ சட்டங்களாகப் போய்க்கொண்டிருப்பதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது என்று தெரிவித்தார்.

SwissLife
Select


மருத்துவ காப்புறுதி


வாகனக் காப்புறுதி


குழந்தைகளுக்கான காப்புறுதி


ஆயுட் காப்புறுதி


சட்டக் காப்புறுதி

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com



SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

Aaran Ayurveda
& Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# சேதன உரத் தொழிற்சாலை திறந்து வைப்பு


(எஸ்.தில்லைநாதன்)

வடமராட்சி முள்ளியில் சுமார் 23 கோடி பெறுமதியான சேதன குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை ஞாயிற்றுக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் உதவி மூலம் உருவாக்கப்பட்ட இந்த தொழிற்சாலையால் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் கிலோ உரத்தை உருவாக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது. கரவெட்டி பிரதேச சபையின் ஆளுகைக்குள் காணப்படும் இந்த தொழிற்சாலை மூலம் பிரதேச சபைகளின் குப்பை பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் 9 மாகாணத்துக்கும் ஒரு திட்டம் வழங்கப்பட்ட நிலையில் வட மாகாணத்துக்கான திட்டம் கரவெட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், த.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், யாழ் அரச அதிபர் மகேசன், வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் றஞ்சன், வடக்கு மாகாணசபை முன்னாள் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், பிரதேச செயலாளர்கள், நகரசபை மற்றும் பிரதேசசபை தவிசாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



*பொத்துவில் பிரதேசத்தில் உள்ள கிராங்கோவை, உடகோவை, மூங்கில் சோலை, கிணற்றடி வாய்க்கால் ஆகிய கண்டங்களை சேர்ந்த விவசாயிகள் ஞாயிற்றுக்கிழமை தங்களின் வயற்காணிகளில் நின்றவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

# காதி நீதிமன்ற ஒழிப்பு தொடர்பான அமைச்சரவை தீர்மானம் குறித்து முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

## இம்ரான் எம்.பி கேள்வி



(இஃஜாஸ் ஏ பரீட்)

இலங்கையில் நடைமுறையில் உள்ள காதி நீதிமன்றங்களை ஒழிப்பது தொடர்பாக அமைச்சரவை தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது. இது குறித்து அரசுக்கு ஆதரவு வழங்கும் முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு என்ன என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பியுளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியுள்ளதாவது:

இலங்கையில் சுதந்திரத்துக்கு முன்னைய காலத்திலிருந்து முஸ்லிம் சட்டம் அமுலில் இருந்து வருகின்றது. அதன்படி தோற்றுவிக்கப்பட்டது தான் காதி நீதிமன்றங்கள். இந்த காதி நீதிமன்றங்களை மூடிவிட அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதிலிருந்து இந்த அரசாங்கம் முஸ்லிம் சமுகத்தை எவ்வாறு கையாள்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

இந்த அமைச்சரவை தீர்மானம் குறித்து அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இதுவரை எவ்வித கருத்துகளும் தெரிவிக்கவில்லை. எனவே, இந்த மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியா என்ற கேள்வி எழுகின்றது.

இந்தக் கட்சிகள் முஸ்லிம் மக்களின் உரிமையை வென்றெடுப்பதாகத் தோற்றுவிக்கப்பட்ட கட்சிகள் என்று தான் மக்கள் மத்தியில் ஊடுருவின. அநேகமாக எல்லா தேர்தல் மேடைகளில் முஸ்லிம்களின் உரிமைகள் பற்றிய வாசகங்கள் ஒலிக்கின்றன.

காதி நீதிமன்றங்கள் முஸ்லிம்களின் வாழ்வியல் சம்பந்தமானவை. சமய விவகாரங்களோடு தொடர்புபட்டவை. இது இந்த சமுகத்தின் மிக முக்கிய உரிமைகளுள் ஒன்று. இந்த காதி நீதிமன்றங்களை ஒழிக்கத்தான் அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை இதனைவிட உரிமை மீறல் எதுவும் இருக்க முடியாது. எனவே, இதுவிடயத்தில் இந்த கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவு படுத்த வேண்டும்.

காபட் வீதி, ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைமை, அமைச்சுக்களின் ஆலோசனை சபை உறுப்பினர் போன்ற சலுகைகளுக்கு இந்தக் கட்சிகள் துணை போய் விட்டதான குற்றச்சாட்டு பொது மக்கள் மத்தியில் உள்ளது.

காதி நீதிமன்றங்கள் விடயத்தில் இந்தக் கட்சிகளின் மௌனம் இந்தக் குற்றசாட்டுக்களை உறுதிப்படுத்துவதாக அமைந்து விடும்.

எனவே, காதி நீதிமன்ற ஒழிப்பு தொடர்பாக அரசுக்கு ஆதரவு வழங்கும் முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகள் தமது நிலைப்பாடு என்ன என்பதை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

# இஞ்சி மஞ்சள் உற்பத்தியில் வெற்றி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்குக்கு அமைய முள்ளிப் பொத்தானையில் நஞ்சற்ற விவசாய உற்பத்தியில் சேதனப் பசளை மூலமாக மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கையில் இஞ்சி மஞ்சள் அறுவடை வெற்றி கண்டுள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் விவசாயி ஒருவர் தனது வீட்டு வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட இஞ்சி, மஞ்சல், கற்றாளை போன்ற பயிரினங்கள் சேதனை பசளை மூலமாக பாரிய வளர்ச்சியும் வெற்றியும் கண்டுள்ளதாக வீட்டு தோட்ட உற்பத்தியாளர் தெரிவித்தார். நஞ்சற்ற நாட்டை விவசாய ரீதியாக உற்பத்தி செய்யும் நோக்கில் ஆறு மாத காலத்துக்கு பின் சிறந்த அறுவடை கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இரசாயன பசளையை விட சேதனப் பசளை மூலமாக இந்த அறுவடை வளர்ச்சி கண்டுள்ளது எனவும் மேலும் தெரிவித்தார். தனது வீட்டு தோட்டத்தில் ஒரு பகுதியில் குறித்த விவசாய உற்பத்தியினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள்


(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட கணேசபுரம் கிராமத்தின் முதலாம் வட்டார பிரதான வீதி மிகவும் நீண்டகாலமாகவிருந்து பழுதடைந்த நிலையில காடணப்படுவதனால் அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் பயணிப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சுற்றிவர வயல் நிலத்தை ஊடறுத்துச் செல்லும் இவ்வீதியை அக்கிராம மக்கள், விவசாயிகள், மாணவர்கள் என பலரும் தினமும் பயன்படுத்தி வருகின்றனர். மழை வெள்ள காலத்தில் முற்றாக வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்பபடும் இவ்வீதி ஏனைய காலத்தில் சிறுபோக வேளாண்மைச் செய்கைக்குப் பயன்படுத்தும் நீரும் குறித்த வீதியை ஊடறுத்துப் பாய்வதனால் அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்குப்பட்டே போக்குவரத்துச் செய்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தேர்தல் காலத்தில் பலர் வந்து எமது வீதியை செப்பனிட்டுத் தருவதாகத் தெரிவித்துச் சென்றுள்ள போதிலும் இதுவரையில் இதுபற்றி யாரும் கவனிக்கவில்லை எனவும் அங்குள்ள மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அப்பகுதி மக்களின் நலங்களைக் கருத்திற் கொண்டு துரிதகதியில் குறித்த வீதியை செப்பனிட்டுத்தருமாறும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# தலைமன்னார் பியரில் 2357 நபர்களுக்கு

## அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுப்பு


(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தலைமன்னார் பியர் பகுதியில் கொரோனா காரணமாக முடக்கப்பட்டிருக்கும் இரு கிராம அலவலக பிரிவுகளிலுள்ள மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் சம்பந்தமாக அப்பகுதியில் கிராமிய கொரோனா பாதுகாப்பு குழு ஒன்று நியமிக்கப்பட்டு அவர்களுடனான கலந்துரையாடலும் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் இடம்பெற்றுள்ளது.


மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தலைமன்னார் பியர் கிழக்கு எம்என்.51 மற்றும் தலைமன்னார் பியர் மேற்கு எம்என்.50 ஆகிய இரு கிராம அலுவலகர் பிரிவுகளில் கடந்த வாரம் கொரோனா தொற்றாளர்கள் 62 பேர் இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் இவ்விரு கிராம அலுவலகர் பிரிவுகளும் காலவரையின்றி தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக தலைமன்னார் பியர் கிழக்கில் 626 குடும்பங்களைச் சேர்ந்த 2305 நபர்களும், தலைமன்னார் பியர் மேற்கில் 21 குடும்பங்களைச் சார்ந்த 52 நபர்களும் மொத்தமாக இப் பகுதியில் 64% குடும்பங்களைச் சார்ந்த 2357 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.


இவர்களுக்கு அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையாக சனிக்கிழமை (26.06.2021) மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் தலைமன்னார் பியர் பாடசாலை வளாகப் பகுதிக்குள் ஆலோசனைக் கூட்டம் இடம் பெற்றது.

இவ் கூட்டத்தில் சுகாதார பொது சேவைகள் அதிகாரிகள், முப்படை அதிகாரிகள். மன்னார் பிரதேச சபை தலைமன்னார் பியர் உறுப்பினர் எஸ்.எம்.நயீம் மற்றும் தலைமன்னார் பியர் கிராமிய கொரோனா பாதுகாப்பு குழுவின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இவ் கூட்டத்தில் இவ் கிராமத்தை விட்டு மக்கள் வெளியே செல்வதற்கான தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான மருத்துவ சேவைகள் குறிப்பிட்ட நேரத்துக்கு தலைமன்னார் வைத்தியசாலை வைத்திய குழுவினரால் பொது மண்டபத்தில் மேற்கொள்ளப்படும் எனவும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் அனைவருக்கும் அரசாங்கத்தால் வழங்கப்படும் ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் திங்கள் கிழமை முதல் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன் இவ் முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் அத்தியாவசிய தேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்படின் இது தொடர்பாக இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் தெரிவிக்கும்பட்சத்தில் அதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என இவ் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.







கோடைகால சுற்றுலா
கொண்டாட்டம்
இத்தாலி
2021
பயணம் வாழ்க்கையின் வழிகாட்டி...
24.07.2021 முதல்
30.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels


நல்லூர் சுவையகம்
உங்கள் இல்ல விழாக்கள் அனைத்தையும் சிறப்பித்திட
எங்கள் சைவ அசைவ உணவுகளைக்கொண்டு
மெருகூட்டுங்கள்.
Party Service
சுவிஸ் முழுவதிற்கும் எமது சேவை
மலிவு, தரம், நம்பிக்கை
எங்கள் விளம்பத்தை உடனுக்குடன் தெரிந்து கொள்வதிற்கு
எங்கள் Fb பக்கத்தை லைக் செய்யுங்கள். Nallur Travels
Nallur Angadi Murtenstrasse 269, 3027 Bern.
031 991 85 31 | 079 964 04 74


கோடைகால
சுற்றுலா கொண்டாட்டம்
10.07.2021 முதல் 16.07.2021 வரை 31.07.2021 முதல் 6.08.2021 வரை
Amazing
Spain
it begins with the
pepole...
பேருந்து
புறப்படும் இடங்கள்
St Galan | Zurich | Baden
Aarau | Bern | Freiburg
Lausanne & Geneva.
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels
031 991 85 31
079 964 04 74


2021
கோடைகால
சுற்றுலா
கொண்டாட்டம்
Wonderful
Portugal
17.07.2021 முதல்
23.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels




# நுவரெலியா மாவட்டத்தில் 122 பேர் பலி;7219 பேருக்கு தொற்று

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 7219 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். 122 பேர் உயிரிழந்துள்ளனர். 24 மணி நேரத்தில் 78 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தின் கொரோனா தொற்று தொடர்பாக 27.6.2021 மாலை வெளியான அறிக்கையின்படி 7219 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இவர்களில் 122 பேர் மரணமடைந்துள்ளனர். 4777 குடும்பங்கள் தன்மைப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 26.06.2021 வரையான 24 மணித்தியாலயத்தில் 78 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் 51 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அம்பகமுவ பகுதியில் 1643 குடும்பங்களும் கொத்மலை பகுதியில் 1043 குடும்பங்களும் ஹங்குரன்கெத்த பகுதியில் 243 குடும்பங்களும் வலப்பனை பகுதியில் 1037 குடும்பங்களும் நுவரெலியாவில் 811 குடும்பங்களுமாக மொத்தமாக 4777 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரேனா தொற்று உறுதியானவர்களில் அதிகமானவர்கள் அம்பகமுவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் அம்பகமுவ பகுதியில் 1358 பேரும் பொகவந்தலாவ பகுதியில் 834 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 406 பேரும் கொட்டகலை பகுதியில் 473 பேரும் கொத்மலையில் 650 பேரும் லிந்துலையில் 499 பேரும் மஸ்கெலியா 326 பேரும் மதுரட்ட பகுதியில் 140 பேரும் நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களில் 406 பேரும் புதிய திஸ்பனை பகுதியில் 707 பேரும் நுவரெலியாவில் 579 பேரும் இராகலையில் 502 பேரும் வலப்பனை பகுதியில் 339 பேருமாக மொத்தமாக 7219 பேர் பி.சி.ஆர் பரிசோதனையின் மூலமாக தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். தொற்றாளர்கள் அதிகம் இனம் காணப்பட்ட பிரதேசமாக அம்பகமுவ பிரதேசம் காணப்படுகின்றது. இங்கு 1358 பேர் இனம் காணப்பட்டுள்ளதுடன். இதுவரையில் நுவரெலியா மாவட்டத்தில் 122 பேர் உயிரிழந்துள்ளதுடன். அதில் அதிகமானவர்கள் நுவரெலியா பகுதியிலேயே உயிரிழந்துள்ளனர். 47 பேர் உயிரிழந்துள்ளனர். இது தவிர அம்பகமுவ பகுதியில் 43 பேரும் வலப்பனை பகுதியில் 14 பேரும் கொத்மலையில் 16 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 2 பேருமாக 122 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் அதாவது இந்த அறிக்கை வெளியான (27.06.2021) அன்று மாலை 4 மணி வரை புதிய புதிய திஸ்பனை பகுதியிலேயே அதிகமான தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். 35 பேர் இனம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை மாவட்ட பொது வைத்திய சாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைப்பு



(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் தேவை கருதி சில உபகரணங்களை வழங்குமாறு மாவட்ட அரசாங்க அதிபரிடம் வைத்தியசாலை நிர்வாகம் வேண்டியதற்கிணங்க அரசாங்க அதிபர் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதற்கிணங்க Street child organisation குறித்த ஒரு தொகை பொருட்களை இன்று மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் அவர்களிடம் கையளித்தனர்.

குறித்த பொருட்கள் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்படவுள்ளது.

இப்பொருட்களை கையளிக்கும் நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ். பலமேஸ்வரன், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் கே.சுகுணதாஸ், Street child நிறுவனத்தின் பொறுப்பதிகாரி டொக்டர். ரவிச்சந்திரன், மாவட்ட செயலக அரச சார்பற்ற நிறுவன ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் கே.நிர்மலகாந்தனும் கலந்து கொண்டனர்.

## குருநாகலில் 2 வது டோஸ் 817 பேருக்கு

(இக்பால் அலி)



குருநாகல் தெலிகொன்ன கிராம உத்தியோகஸ்தர் பிரிவுக்கு 02 வது தடுப்பூசிகள் 817 பேருக்கு வழங்கப்பட்டன.

குருநாகல் சுகாதார வைத்திய அலுலகத்திற்கு தெலியாகொன்ன கிராம உத்தியோகஸ்தர் பிரிவுக்கு சைனோபார்ம் தடுப்பூசிகள் குருநாகல் தெலியாகொன்ன ஹிஸ்புல்லாஹ் மத்திய கல்லூரியில் வழங்கப்பட்டது.

இதில் குருநாகல் மாநகர முதல்வர் துசார சஞ்ஜீவ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார் கலந்து கொண்டனர்.

குருநாகல் மாநகர முதல்வர் கருத்து தெரிவிக்கையில்

கொரோனா தொற்று தடுப்பூசிகள் வழங்கும் விடயத்தில் மேல் மாகாணத்திற்கு அடுத்த இடத்தை குருநாகல் மாவட்டம் முன்னிலை வகிக்கின்றது. இது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் ஜொன்ஸ்டனின் முயற்சியால் முன்னெடுக்கப்பட்டதாகும் என்று அவர் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் 02 வது தடுப்பூசிகள் ஒரு இலட்சத்திற்கும் மேல்பெற்றுக் கொள்ள வழி வகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது மக்கள் 02 வது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் நாங்கள் பூரிப்படைகின்றோம். குருநாகல் நகரில் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்ற மக்கள் பூரிப்படைந்து ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்

## நூலகம் வகுப்பறையாக மாற்றம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரம்பொடை தவலந்தனை தோட்டத்தில் வாசிகசாலையாக பயன்படுத்தி வந்த கட்டிடத்தை மீள் புனரமைத்து அக்கட்டிடத்தில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ளவதற்கு வகுப்பறை, கிராம உத்தியோகஸ்த்தர் காரியாலயம் மற்றும் நூலகம் ஆகியன உள்ளடங்கிய கட்டிடத் தொகுதியாக தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.



## சமூர்த்தி உத்தியோகத்தர்களின் பாதுகாப்புக்களை துரிதப்படுத்துமாறு கோரிக்கை



(சர்ஜுன் லாபீர்)

தற்போதைய நாட்டின் அசாதாரண கொரோனா சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தின் 5000/- ரூபாய் கொடுப்பனவு உட்பட பல கடமைகளை மக்களோடு மக்களாக இணைந்து கடமையாற்றும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி வழங்குவதை துரிதப்படுத்தல் மற்றும் அவர்களின் கொரோனா கால பாதுகாப்பு நடவடிக்கைகளை துரித்தப்படுத்துமாறு கல்முனை சமூர்த்தி நலனோம்பல் அமைப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கல்முனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி அண்மையில் மரணமடைந்த சமூர்த்தி உத்தியோகத்தர் ஏ.எச் நளீமின் மரணக் கொடுப்பணவை துரிதப்படுத்தக் கோரியும், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கள உத்தியோகத்தர்களின் கொரோனா கால பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் கோரி கல்முனை சமூர்த்தி நலனோம்பல் சங்கத்தினால் கல்முனை பிரதேச செயலாளர் ஜெலியாக்கத் அலி ஊடாக மாவட்ட செயலாளர் மற்றும் சமூர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு மகஜர் கையளிக்கும் நிகழ்வு கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர் எம்.சாலீஹ், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம் ரம்சான், சமூர்த்தி உதவி முகாமையாளர்களான எஸ்.எல் ஏ அஸீஸ் ,எம் மன்ஸூர், சமூர்த்தி நலனோம்பல் அமைப்பின் தலைவர் ஏ.எச்.எம்.நவாஸ் ,சமூர்த்தி உத்தியோகத்தர் எம்.அர்சத்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பழமையான சொத்துக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது



ஆரிப் சம்சுதீன்

(துறையூரான்)

துறைமுக நகரத்திற்கு அண்மித்துக் காணப்படுகின்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பழமையான சொத்துக்களை உள்நாட்டு வெளிநாட்டு நபர்களுக்கு பெற்றுக்கொடுக்க, அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஆரிப் சம்சுதீன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

துறைமுக நகரச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட சூட்டோடு அதனை நிர்வகிப்பதற்கான ஆணைக்குழுவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளது. அத்தோடு துறைமுக நகரத்திற்கு அண்மித்துக் காணப்படுகின்ற கேந்திர முக்கியத்துவம் மிக்க பழமையான சொத்துக்கள் புதிதாக உருவாக்கப்படுகின்ற ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்படுவதற்காக பிரதம மந்திரியினால் அமைச்சரவைப் பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சீனா சார்பான தனியார் நிறுவனங்களிடம் கையளிப்பதற்கான முஸ்தீபும் இடம் பெற்றுள்ளது.

அரசாங்கம் செலன்திவா இன்வஸ்ட்மன் பிரைவேட் லிமிட்டெட் என்ற முதலீட்டு நிறுவனத்தை அமைத்து, கொழும்பில் இருக்கும் பெறுமதி வாய்ந்த காணிகள் மற்றும் பாரம்பரியக் கட்டிடங்களை உள்நாட்டு வெளிநாட்டு நபர்களுக்கு குத்தகைக்கோ உரித்துரிமைக்கோ வழங்குவதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வெளிப்படைத் தன்மையுடன் சட்ட திட்டங்களுக்குட்பட்டு அரசு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனின் அதனை எவரும் வரவேற்பார்கள். ஆனால் எந்தவித கேள்வி மனுக்கோரல்களும் அழைக்கப்படாமல் அரசினால் தெரிவு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கு பாரிய சொத்துக்கள் கையளிக்கப்படுகின்ற பொழுது, அரசு நாட்டினதும் மக்களினதும் எதிர்கால சந்ததியினதும் நலன்களைக் கொண்ட செயற்பாடுகளில் இறங்குகின்றதா அல்லது தங்களுக்கு கிடைக்கின்ற தனிப்பட்ட நலன்களுக்காகவா இவ்வாறு செயற்படுகிறது என்கின்ற கேள்விக்கு விடை காண முடியாமலிருக்கின்றது.

வெள்ளை யானை எனக் கூறப்படுகின்ற மத்தள விமான நிலையம், ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, கொழும்பு துறைமுக நகரம் போன்றவற்றின் விளைவுகளை அவதானிக்கின்ற பொழுது மக்களினதும் எதிர்கால சந்ததியினதும் நலன்கள் கவனத்தில் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை என்றார்.

## சேதனப் பசளை தயாரிக்கும் செயற்பாடு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பம்



(க.ருத்திரன்)

நாட்டை சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்லும் ஜனாதிபதியின் செயற்திட்டத்திற்கு அமைய விவசாய நிலத்திற்கு தேவையான சேதனப் பசளை உற்பத்தி மற்றும் காய்கறி உற்பத்தி எனும் தொணிப் பொருளில் சேதனப் பசளை தயாரிக்கும் செயற்பாடு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிரான் பிரதேச விவசாயத் திணைக்களத்தின் வழிகாட்டலில் விவசாயியான பு.சுரேஸ் எனும் விவசாயி சவாலாக ஏற்று சேதனப் பசளை தயாரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார். இவருக்கான பயிற்சி,ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை விவசாய திணைக்களம் வழங்கியுள்ளது.

கிரான் விவசாய திணைக்கள பிரிவில் 5 இடங்களில் இவ்வாறான உற்பத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரசாயன உரப்பாவனையினை தடுத்தும் நஞ்சு விசமற்ற நாட்டை கட்டியெழுப்பும் நோக்குடன் அரசினால் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் கிரான் விவசாயிகளுக்கான எதிர்வரும் பெரும்போகச் செய்கைக்கு தேவையான சேதனப் பசளைகளை வழங்க வேண்டிய தேவை கருதி இதனை ஆரம்பித்துள்ளனர்.

கிரான் தொப்பி கல வீதியில் செட்டியார் குடியிருப்பில் சேதனப் பசளை தயாரிக்கும் இவ் நிலையம் காணப்படுகிறது.

மாட்டெரு,கிளிசிறிடியா,சல்பினியா,வைக்கோல்,தும்பு,கருகிய உமி,விவசாயக் இலைக் கழிவுகள் போன்ற மூலப் பொருட்களை கொண்டு இவ் சேதனப் பசளை தயாரிக்கப்படுகிறது.

இதற்கான நிர்ணய விலை விவசாயத திணைக்களத்தினால் நிர்ணயம் செய்யப்படும்.நஞ்சற்ற பாரம்பரிய சேதனப் பசளையை தயாரித்து விவசாயிகள் விவசாயத்தினை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதனையிட்டு தாம் மகிழ்சியடைவதாக பசளை உற்பத்தியாளர் தெரிவித்தார்.





# வெளி மாவட்ட பக்தர்கள் மருதமடு விழா திருப்பலிகளில் கலந்து கொள்ள தடை

## ஆயர் அறிவிப்பு



(வாஸ் கூஞ்ஞ)

நடைபெற இருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு ஆடிமாத பெருவிழாவுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து பக்தர்கள் கலந்துகொள்ள தடைவிதிக்கப் பட்டிருக்கும் இவ்வேளையில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவும் இன்னும் வேறு ஒரு சில இடங்களும் கொரோனா அதிக அபாய இடமாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளதால் இப்பகுதியிலிருந்தும் பக்தர்கள் மருதமடு விழா திருப்பலிகளில் கலந்துகொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது என இது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஆடிமாத மருதமடு பெருவிழா தொடர்பாக இறுதி ஆலோசனைக் கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மருதமடு ஆலய மண்டபத்தில் திங்கள் கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்றது.

இவ் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்பணி அ.விக்ரர் சோசை அடிகளார். மருதமடு ஆலய பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார், மன்னார் மேலதிக அரசு அதிபர் எம்.குணபாலன், மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் உட்பட பொலிஸ், இராணுவ அதிகாரிகள் சம்பந்தப் பட்ட திணைக்கள அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

இதைத் தொடர்ந்து மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு திருத்தலத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் முன்னிலையிலும் மற்றும் இராணுவ. பொலிஸ் அதிகாரிகள் உட்பட அரச திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் இணைந்து ஆடிமாதம் இரண்டாம் திகதி நடைபெற இருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு பெருவிழாவையிட்டு ஒரு சில தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

இவ் விழாவை முன்னிட்டு கடந்த 23ந் திகதி கொடிறே;றத்துடன் இவ் விழா நவநாட்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் முதலாம் திகதி வெஸ்பர் மாலை ஆராதனையும் இரண்டாம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலியும் நடைபெற இருக்கின்றன.

எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப வெளி மாவட்டங்களிலிருந்து இவ் விழாவுக்கு எவரையும் வருவதற்கு எதிர்பார்க்கவில்லை. கடந்த ஆறு நாட்களாக நடைபெற்ற நவநாட்களுக்குகூட ஆறு ஏழு பேர்கள்தான் கலந்து கொண்டனர்.

இருந்தும் இவ் நவநாட்களில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலே போதனைகளுடன் நவநாட்கள் சிறப்பாக இடம்பெறுகின்றன. இவைகளை நாங்கள் இணைத்தளங்கள் ஊடாக வழங்கிக் கொண்டு இருக்கின்றோம்.

இம்முறை நடைபெறும் இவ் திருவிழாவுக்கு வேறு மாவட்டங்களிலிருந்து பக்தர்கள் வருவதற்கு எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதுவிடயமாக கடந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக இவ் திருவிழா திருப்பலிக்கு முப்பது பேர் மட்டும் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மன்னார் பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் இன்னும் வேறு ஒரு சில இடங்களிலிருந்தும் கொரோனா அதிக அபாய இடமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியிலிருந்து பக்தர்கள் மருதமடு விழா திருப்பலிகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. இருந்தும் இவ் விழா தொடர்பாக இணையதளங்கள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் பக்தர்கள் திருப்பலிகளில் பங்கு கொள்ளும் முகமாக இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆகவே இவ்வேளையில் நாம் இன்றைய சூழ்நிலையை உணர்ந்து அன்னையின் பரிந்துரையை வேண்டி நிற்போம். எமது நாட்டிலும் மற்றும் உலக நாடுகளிலும் இவ் பெருந் தொற்று நோயானது அகற்றப்பட்டு மக்கள் விடுதலை பெற்றவர்களாக வழமையான வாழ்வுக்கு ஒவ்வொருவரும் திரும்ப வேண்டும் என்று நாம் விஷேடமாக மருதமடு அன்னையிடம் மன்றாடுவோம் என மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

# சுவிஸ் சூக் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய போதுக்கூட்டமும் நிர்வாகசபை தேரிவும்

சுவிஸ் சூக் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய 2021ம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சூக் கூனன் பேர்க் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் திரு சுதாகர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதுடன் ஆலயம் ஈழத்தில் உள்ள ஏழை மக்களுக்கு உதவும் விதமாக ஆலய நிதியில், குறிப்பிட்ட ஒரு தொகையை வருடாந்தம் ஒதுக்குவதாகவும் தீர்மானிக்கப் பட்டது.

அத்தோடு நிர்வாகத்தில் இளையோர்கள் , பெண்கள் என பலதரப்பட்டவர்களையும் உள்ளீர்த்து , நிர்வாகத்தை அமைத்தமை சிறப்பம்சமாகும். நிருவாகத்தெரிவில் தலைவராக மீண்டும் தர்மராஜா சுதாகரும், செயலாளராக சாந்தரூபன் கரனும்,பொருளாளராக ஆறுமுகம் பாலசிங்கம் அவர்களும் உபதலைவராக காண்டீபன் அமிர்தலிங்கமும் ,உப செயலாளராக லஸ்சன் சாந்த குமாரும் , நிர்வாக சபை உறுப்பினர்களாக சியாமளா - பரமேஸ்வரனும் , கெரி தவராசாவும் இளங்கோ - சிவநேசனும் சச்சிதானந்த மூர்த்தி தியாகராசா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 169 பேருக்கு கொரோனா தொற்று உறுதி!

**வைத்திய கலாநிதி நா.மயூரன் தெரிவித்தார்.**

**மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 34 பேரும், களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேரும், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேரும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 37 பேரும், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேரும், கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 பேரும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேரும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 25 பேரும், வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேரும், வவுனதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேரும், வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேரும், ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேரும், ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மொத்தமாக 169 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளதுடன், ஏறாவூரில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.**

# கந்தளாயில் சீமெந்து ஏற்றிச்சென்ற லோறி விபத்து :சாரதி படுகாயம்

(எப்.முபாரக்)



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சீமேந்து ஏற்றிச்சென்ற லொறியொன்று விபத்துக்குள்ளானதில் லொறியின் சாரதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று காலை 5.00 மணியளவில் கந்தளாய் 92 ஆம் கட்டைப் சந்தியில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

52 வயதுடைய சாரதி ஒருவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

திருகோணமலையிலிருந்து குருணாகலைக்குச் சென்ற லொறியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை தூக்கத்தினாலே இவ்விபத்து நிகழ்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பு - ஓந்தாச்சிமடம் கடற்கரையில் இறந்த நிலையில் கரை ஒதுங்கிய மற்றுமோரு கடல் ஆமை



(ரக்ஸனா)

அண்மைக்காலமாக கிழக்குக் கடற்கரையிலும் கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்ற இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்டம் ஓந்தாச்சிமடம் கடற்கரையில் இறந்த நிலையில் கடல் ஆமை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

ஆமை ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளதை கடற்கரையில் நின்றவர்கள் அவதாளித்துள்ளனர். இவ்விடையம் தொடர்பில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணக்களத்தினருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து அதன் உத்தியோகஸ்த்தர்கள் இஸ்த்தலத்திற்கு விஜயம் செய்து ஆமையை பார்வையிட்டு பரிசோதனைகளுக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

# போரதீவுப்பற்றில் இரத்ததான முகாம்





(ரக்ஸனா)

போரதீவுப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஒன்று போரதீவுப் பற்றுப் பிரதேச செலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை இளைஞர் சேவை உத்தியோகஸ்த்தர் கே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராசா, போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகி, அகிலன் பவுண்டேசன் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் வி.ஆர்.மகேந்திரன், மற்றும் போரதீவுப்பற்று பிரதேச இளைஞர் யுவதிகள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

அகிலன் பவுண்டேசன், அமைப்பு அனுசரணையில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில் 70 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு கலந்து கொண்டு இரத்த நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டனர்.

# கோட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேலும் 26 கோவிட் தோற்றாளர்கள்

(க.கிஷாந்தன்)

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேலும் 26 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் பதிவான தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களே புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனை முடிவுகளுக்கு அமையவே புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை கிரேட்வெஸ்டன் தோட்டத்தில் எண்மரும், கொட்டகலை வூட்டன் தோட்டத்தில் 8 பேரும் ஏனைய தொற்றாளர்கள் தலவாக்கலை, வட்டகொட, போகாவத்தை, ரொசிட்ட வீட்டு திட்டம், திம்புளை - பத்தனை ஆகிய பகுதிகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

26 தொற்றாளர்களையும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

# கிழக்கு ஆளுனரால் இணைய வசதியற்ற மாணவர்களுக்கு வினாத்தாள்கள் வழங்கி வைப்பு

**இல்லாத மாணவர்களுக்கு வினாத்தாள் அடங்கிய பொதிகளை விநியோகிப்பதற்கான திட்டத்தினை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.முதற்கட்டமாக குறித்த வினாத் தாள்களை திருகோணமலையில் உள்ள ஆளுனர் செயலகத்தில் வைத்து மாகாண ஆளுனர் வழங்கி வைத்தார்.**

**வலயக் கல்வி பகுதிக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் அதிகாரிகளுக்கும் வினாத்தாள் தொகுப்புகளை ஆளுநர் விநியோகித்தார்.**

**இணைய வசதிகள் இல்லாத மாணவர்களுக்காக இந்த நடவடிக்கை மிகவும் பாராட்டப்பட வேண்டும் என்று ஆளுநர் கூறினார். அந்த மாணவர்களிடையே நிச்சயமாக திறமையான மாணவர்கள் இருக்கிறார்கள், அவர்களை மறந்துவிடாது மிகவும் முக்கியம் என்று ஆளுநர் கூறினார்.**

**இந்நிகழ்வில் திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.**

# 8 நாடுகளில் இருந்து இலங்கை வர தடை

**ஜூன் 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தடை விதிக்கப்படவுள்ளதாக இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

**இதன்படி அங்கொலா, போட்ஸ்வானா, லெசோதோ, மொசாம்பிக், நமீபியா, சாம்பியா, சிம்பாப்வே மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து பயணிகளுக்கு இலங்கை வருவதற்கு அனுமதி வழங்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**கடந்த 14 நாட்களினுள் குறித்த நாடுகளுக்குச் சென்ற பயணிகளுக்கும் மற்றும் அந்த நாடுகளின் வழியாக வரும் ஏனைய பயணிகளுக்கும் இந்தத் தடை பொருந்தும் என சிவில் விமான சேவை அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.**

**இந்தத் தடையானது ஜூன் 30ஆம் திகதி நள்ளிரவு முதல் ஜூலை 31 ஆம் திகதி நள்ளிரவு வரை அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

# புலிகளின் ஆடையை ஒத்த சீருடையை அணிந்தால் கைது சீன இராணுவ சீருடை அணிந்தவர்களுக்கு எதிராக மௌனம் ஏன்?

## அக்மீமன தயாரத்ன தேரர் கேள்வி

**புனரமைக்கும் அதிகாரத்தை சமல் ராஜபக்சவிற்கு வழங்கியது யார் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

**சீன இராணுவ சீருடையை ஒத்த உடையணிந்து திஸ்ஸமஹராம வாவியில் சேற்று மண்ணை அகழும் சீன பிரஜைகள் தொடர்பாக கொழும்பின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.**

**குறித்த இராணுவ சீருடையில் சின்னங்கள் மற்றும் குறியீடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளை இந்த உடையிலும் காண முடிந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.**

**இந்த விடயம் இலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், சிங்கள ராவய அமைப்பின் உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரர், சீன இராணுவ சீருடையை ஒத்த உடையணிந்து திஸ்ஸமஹராம வாவியில் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் என்னவென அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.**

**கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்திற்கு அவர் தமது கடும் எதிர்ப்பினையும் வெளிப்படுத்தியுள்ளார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், சீன இராணுவத்தை இந்த நாட்டிற்கு எவ்வாறு வழரவழைத்தார்கள்? வேறு நாட்டு இராணுவத்தை உள்நாட்டு விடயங்களில் எவ்வாறு ஈடுபடுத்தினார்கள். இந்த நாட்டின் இறையாண்மை மற்றும் சுயாதீனத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விடயமல்லவா இது? இதற்கு பொறுப்புக்கூறப்போது யார்?**

**இரு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆடையை ஒத்த உடையை அணிந்து பணியாற்றிக்கொண்டிருந்தார்கள் என்ற காரணத்திற்காக, சிலர் கைது செய்யப் பட்டனர்.**

**இந்த நாட்டின் பிரஜைகளை கைது செய்தார்கள். எனினும் சீன இராணுவத்தை நாட்டிற்கு அழைத்து வந்தவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.**

**ஏன்? 69 இலட்சம் வாக்குகளை வழங்கி சமல் ராஜபக்சவிற்கு இந்த அதிகாரத்தை வழங்கப்பட்டுள்ளதா? என நாம் கேட்க விரும்புகின்றோம்.**

**இந்த நாட்டின் சட்டம் இன்று கேலிக்குரியதாக மாறியுள்ளது. சட்டத்தை தவறாக பயன்படுத்தியுள்ளார்கள். சீனா இராணுவத்தை நாட்டிற்கு அழைத்து வந்தமை தவறு. வாவி ஒன்றை புனரமைக்கும் இயலுமை எமக்கில்லையா? சீனாவிற்கு இதனை எவ்வாறு ஒப்படைத்தார்கள்.**

**நாட்டில் பலர் ஒரு நாளுக்கு ஆயிரம் ரூபாயை உழைத்துக்கொள்ளவே கஷ்டப்படும் இந்த நிலைமையில், தொல்பொருள் சட்டத்தை மீறி சீனர்களைக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்தப் பணிகள் தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் எடுத்த நடவடிக்கை என்ன? தொல்பொருள் சட்டத்தை மீறி, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடத்திற்கு சேதம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.**

**பாதுகாப்பு அமைச்சு எடுத்த நடவடிக்கை என்ன? நீர்ப்பாசனத் திணைக்களம் எடுத்த நடவடிக்கை என்ன? இது தொடர்பில் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை என்ன? தற்காலிகமாக நியமனம் பெறும் அமைச்சருக்கு இதில் பொறுப்பில்லாமல் இருக்கலாம் எனினும், திணைக்களங்கள் இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டும்.**

**இதற்கு எதிராக மக்கள் ஒன்று திரளுவார்கள். கொரோனா தொற்றுக் காரணமாக மக்கள் வீதிக்கு இறங்கமாட்டார்கள் என நினைத்தால் அது தவறு என்றார்.**

# 5 வயது சிறுவன் செய்த முன்மாதிரியான சம்பவம்

(யாக்கூப் பஹாத்)

கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக அதிகளவான நபர்கள் மக்களுக்கு உதவிகளை வழங்கி வரும் நிலையில் தானும் மக்களுக்கு உதவ வேண்டும் என்று எம் அனைவருக்கும் ஓர் முன்மாதிரியாக மாறியிருக்கின்றார் இந்த சிறுவன்.

இவரின் மனதில் ஏற்பட்ட இந்த உதவி செய்யும் மனப்பாங்கை புரிந்து கொண்ட இவரது தந்தை நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியை தொடர்பு கொண்டு தன் மகன் உண்டியலில் சேர்த்து வைத்த ( 10216/ ) பத்தாயிரத்து இருநூற்று பதினாறு ரூபா பணத்தை குறித்த பிரிவினரிடம் ஒப்படைத்திருந்தார்.

சிறிய வயதில் இப் பெரிய விடயத்தை மேற்கொண்டிருக்கும் எஸ்.முஹம்மட் ரிஹான் ஆரி அவர்களுக்கு நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணி சார்பாகவும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.





# டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம்!

(எம்.ஏ.றமீஸ்)

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கமைவாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் எல்லைக்குட்பட்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.யு.அப்துல் சமட் தலைமையிலான் இடம்பெற்ற இவ்டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தின்போது பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர்கள், சிவில் சமூகத்தினர் போன்றோர் இணைந்து இவ்வேலைத் திட்டத்தினை முன்னெடுது வருகின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் இவ் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக, இப்பிரதேசங்களில் உள்ள வீடுகள், வெற்றுக் காணிகள், மத ஸ்தலங்கள், வர்த்தக நிலையங்கள் அதன் சுற்றுப்புறச் சூழல்கள் போன்றன அவதானிக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், டெங்கு நுளம்பு பரவக் கூடிய ஏதுவான இடங்களை



கொண்டிருந்தவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் அவர்களுக்கு அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதன்போது டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு, சுகாதாரத் துறையினரால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டதுடன், டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய சூழலில் டெங்கு ஒழிப்பு இரசாயனங்கள் மற்றும் மீன்குஞ்சுகள் போன்றன இடப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இவ்விடங்களை வைத்திருந்தவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், வடிகான்கள், கால்வாய்கள், நீரேந்து பிரதேசங்கள் போன்றன சுத்தப்படுத்தப்பட்டு டெங்கு நுளம்புகள் உண்டாகும் சூழலும் இடங்களும் அழித்தொழிக்கப்பட்டன.

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு அமைவாக நடைபெற்று வரும் இவ்வேலைத் திட்டத்தின் போது வர்த்தக நிலையங்கள் மக்களின் குடியிருப்புப் பிரதேசங்கள் போன்றன விஷேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், கிராமத்தின் பிரதான பாதைகள், வடிகான்கள் போன்றன கண்காணிக்கப்பட்டு அதனை துப்பரவு செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

# உதவிப் பணிப்பாளராக ஏ.எம்.தாஜ் நியமனம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் அலைவரிசையின் உதவிப் பணிப்பாளராக சிரேஷ்ட ஒலிஃ ஒளிபரப்பாளரும் கவிஞரும் சட்டத்தரணியுமான ஏ.எம். தாஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேற்று முன்தினம் (27) ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு பகுதி நேர அறிவிப்பாளராக தெரிவு செய்யப்பட்ட ஏ.எம். தாஜ், பின்னர் நிரந்தர அறிவிப்பாளராகி, சிரேஷ்ட அறிவிப்பாளராக பதவி உயர்வு பெற்று, தற்போது உதவிப்பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் யுத்தம் நடந்த காலகட்டத்தில் இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய வானொலியான யாழ்ப்பாணம் பலாலி சேவையில் பல வருடங்கள் பணி புரிந்துள்ளார்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நேத்ரா அலைவரிசையில் 2004 முதல் சமகால அரசியல் நிகழ்ச்சியான “சதுரங்கம்“ நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வருகிறார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டமாணியும் அத்தோடு, சட்டத்தரணியும் ஆவார்.



ஒலிபரப்புத்துறையில் நீண்ட கால அனுபவம் கொண்ட இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் உள்ள அனைத்து தமிழ் சேவைகளிலும் பணியாற்றியுள்ளார்.

அன்பான சுபாவம் கொண்ட இவர், பழகுவதற்கு இனிமையானவர், பண்பானவர், அனைவரையும் மதித்து பேசக்கூடிய சிறந்த மனிதர், ஆர்ப்பாட்டம் இல்லாத கலைஞரும், மண்வாசனையில் அதீத ஈடுபாடு கொண்ட, பேராசையில்லாத எளிய மனிதருமாவார்.

சிறந்த அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர், கவிஞர் என பன்முக ஆளுமை கொண்ட ஏ.எம். தாஜ், ஊடகத்தில் ஜாம்பவானாக மிளிந்து சிகரத்தை தொட எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# இன்னும் இருவாரங்களில் 150 கட்டில்கள் தயார்!

(வி.ரி.சகாதேவராஜா)

கடுமையாக பாதிக்கப்படும் கொவிட்-19 நோயாளிகளை பராமரிக்க கல்முனை பிராந்தியத்தில் காணப்படும் ஆதார வைத்தியசாலைகளில் 150 கட்டில்கள் இன்னும் இரு வாரங்களில் தயார் என கல்முனை பிராந்திய சுகாதாரசேவைப்பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கயில்:

சடுதியாக அதிகரித்து வரும் கொவிட் 19 நோயாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டும் இறப்புகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டும் எமது பிராந்தியத்தில் காணப்படும் ஏழு ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்களையும் வைத்திய நிபுணர்களையும் அழைத்து எதிர்காலத்தில் கொவிட் 19 முகாமைத்துவ கட்டமைப்பு ரீதியாகப் பொறிமுறை ஒன்றை உருவாக்கியுள்ளோம்.

விடயங்களை ஒருங்கிணைப்பதற்காக இரு வைத்திய நிபுணர்களும் ஒவ்வொரு கொவிட் வைத்தியசாலைகளின் மேலதிக சிகிச்சைகளுக்காக ஒவ்வொரு ஆதார வைத்தியசாலைகளையும் பொறுப்பு கொடுத்து எதிர்காலத்தில் எவ்வாறு எந்த வைத்தியசாலையில் நோயாளிகளை அனுமதிப்பது தொடர்பான சீரானபொறிமுறை உருவாக்கி கொடுக்கப்பட்டது.என்றார்.

# சமூர்த்தி உத்தியோகத்தர்களின் பாதுகாப்புக்களை துரிதப்படுத்தவும்

## – கல்முனை சமூர்த்தி நலனோம்பல் அமைப்பு கோரிக்கை!

(சர்ஜூன் லாபீர்)

தற்போதைய நாட்டின் அசாதாரண கொரோனா சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தின் 5000/- ரூபா கொடுப்பனவு உட்பட பல கடமைகளை மக்களோடு மக்களாக இணைந்து கடமையாற்றும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி வழங்குவதை துரிதப்படுத்தல் மற்றும் அவர்களின் கொரோனா கால பாதுகாப்பு நடவடிக்கைகளை துரித்தப்படுத்துமாறு கல்முனை சமூர்த்தி நலனோம்பல் அமைப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கல்முனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி அண்மையில் மரணமடைந்த சமூர்த்தி உத்தியோகத்தர் ஏ.எச் நளீமின் மரணக் கொடுப்பணவை துரிதப்படுத்தக் கோரியும், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய கள உத்தியோகத் தர்களின் கொரோனா கால பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாரும் கோரி கல்முனை சமூர்த்தி நலனோம்பல் சங்கத்தினால் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாக்கத் அலி ஊடாக மாவட்ட செயலாளர் மற்றும் சமூர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு மகஜர் கையளிக்கும் நிகழ்வு நேற்று (28) கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.



இந் நிகழ்வில் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர் எம். சாலீஹ்,நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம் ரம்சான், சமூர்த்தி உதவி முகாமையாளர்களான எஸ். எல் ஏ அஸீஸ் ,எம் மன்ஸூர், சமூர்த்தி நலனோம்பல் அமைப்பின் தலைவர் ஏ.எச்.எம்.நவாஸ் ,சமூர்த்தி உத்தியோகத்தர் எம்.அர்சத்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொரோனா தொற்றால் 29 பேர் எமது மாநகர சபையில் பாதிக்கப்பட்டுள்ளனர்!

## – திண்மக்கழிவகற்றலுக்கு எமக்கு ஒத்துழைப்பு தாருங்கள்


(பாறுக் ஷிஹான்)

கொரோனா தொற்றால் 29 பேர் எமது மாநகர சபையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டான சூழ்நிலையில் குறைந்த ஆளணியுடன் திண்மக்கழிவகற்றலை முன்னெடுத்துள்ளோம்.எனவே திண்மக்கழிவகற்றலில் குறைபாடுகள் வந்தால் பொறுத்து கொண்டு எமக்கு ஒத்துழைப்புகளை வழங்குமாறு கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர கேட்போர் கூடத்தில் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பாக திங்கட்கிழமை (28) விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

எமது கல்முனை பிராந்தியம் கடந்த 2 மாதங்களாக கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு தற்போது அதில் இருந்து மீண்டு வருகின்றது.எனினும் கொரோனா தொற்று எம்மிடையே மிக அதிகமாக பரவி வருகின்றது.



இதனால் பல மரணங்கள் சம்பவித்து வருகின்றது. மருத்துவ அதிகாரிகள் சுகாதார தரப்பினர் நடவடிக்கை எடுத்திருந்தாலும் கொரோனா பரவல் அதிகரித்தே செல்கின்றது.

தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது எமது மாநகர சபை மக்களுக்கு அத்தியவசியமான சேவைகளை வழங்கி வருகின்றது. அதில் திண்மக்கழிவு முகாமைத்துவம் முக்கியமானது.ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட இச்சேவையானது அத்தியவசிய சேவையாக உள்ளபடியினால் அதை செய்ய வேண்டியது மாநகர சபையின் கடமையாக உள்ளது - என்றார்.